**கலவான பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 08 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கலவான பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிராத கடன் தொகை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படுகையில் நாட்குறிப்பின் மூலம் ரூபா 4,629,410 தொகையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேலும் பேரேட்டுக் கணக்கு

மீதியுடன் வெளிப் பொறுப்பு ஒப்பிடப்படுகையில் ரூபா 951,395 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடனுக்காக செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டித் தொகையான ரூபா 127,183 மீளாய்வாண்டின் செலவினத்திற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக பணம் செலுத்தப்படுகையில் ஈடுசெய்யப்பட்டிருந்த வாராந்த சந்தை மற்றும் பன்றி இறைச்சிக் கடைக்கான வாடகைத் தொகையான ரூபா 300,025 கணக்கீடு செய்யப்பட்டிராத காரணத்தால் வருமானமும் செலவினமும் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது பலவின்ன கொங்கிரீட் பகுதியில் கியூம் குழாய்கள் கொள்வனவு செய்யும் நோக்கில் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 1,102,305 பெறுமதியான காசோலை இரத்துச் செய்யப்படுகையில் குறித்த செலவினம் செலவு வைக்கப்படவதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்கு உரித்தாக செலவினத்திற்காக விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 134,012 பெறுமதியான 02 காசோலைகள் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செலவினங்கள் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய

மீண்டெழும் வருமானம் ரூபா 6,239,691 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 8,447,529 ஆக இருந்தது.

(ஆ) சபையால் முன்னைய ஆண்டுகளின் போது கணக்கீடு செய்யப்பட்டிராத வருமானச் செலவின கணக்கீட்டு விடயங்கள் மற்றும் கணக்குகளுக்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்படுவது வருடாந்தம் மேற்கொள்ளப்படுவது தொடர்ச்சியான அம்சமாக நிலவிவந்துள்ளது. ஆகையால் ஏதேனும் ஓர் ஆண்டின் நிதி விளைவுகள் தொடர்பில் நம்பிக்கை வைக்க முடியாதுள்ளது. இதன் படி, மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் தொடர்பாக இத்தகைய சீராக்கங்கள் எதிர்வரும் ஆண்டுகளின் போது ஏற்படும் ஆபத்து காணப்படுகின்றது. விபரம் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **நிதி விளைவுகள்** | **திரண்ட நிதியச் சீராக்கம்** | | **சீராக்கத்தின் பின்னரான நிதி விளைவு** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **வரவு** | **செலவு** | **ரூபா** |
| | | **ரூபா** | **ரூபா** | |
| 2013 | (4,131,822) | 4,843,815 | 5,129,594 | (3,846,043) |
| 2012 | 1,425,266 | 3,891,000 | 1,586,186 | (879,548) |
| 2011 | 3,780,723 | - | 5,488,660 | 9,269,380 |

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் மிகை ரூபா 2,207,838 தொகையால் குறைவடைந்திருந்ததுடன் அது 26 சதவீதம் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின்

மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பு இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 2,433 | 1,789 | 643 |
| வாடகை | 6,615 | 5,414 | (1,201) |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,165 | 507 | (657) |
| ஏனைய வருமானம் | 7,443 | 8,293 | 849 |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் வீதவரி, வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பணம் போன்ற வருமான விடயங்களின் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமான அளவைப் பார்க்கிலும் முறையே 92 சதவீதத்தாலும், 23 சதவீதத்தாலும், 45 சதவீதத்தாலும், 59 சதவீதத்தாலும், 20 சதவீதத்தாலும் குறைவைக் காண்பித்திருந்தது.

### 2.3.3 வீத வரி

-----------------

1166 வீதவரி அலகுகளில் இருந்து பல வருடகாலமாக நிலவிவரும் ரூபா 2,527,842 தொகையான வீத வரி மீதி அறவிடப்படுவதற்கு இருந்தது.

### 2.3.4 வாடகை

----------

உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2009 மார்ச் 09 ஆம் திகதிய ப.பா.கொ/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, குறித்த தரப்பினர்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட்ட வாடகையைத் திருத்த வேண்டிய போதிலும், சபைக்குரித்தான கடைகளுக்கான வாடகை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 மொத்தக் கம்பக் கட்டணம்

------------------------------------

2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தொலைபேசி மற்றும் தொடர்பாடல் கம்பங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகையில் வர்த்தமானியின் படி, முறையான நடைமுறைகளின் படி, கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் இதன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------

கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் நிறுவகம் தொடர்பாக ஓர் மெய்மையாய்வு 2015 மே மாதம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் வருமானப் பதிவேட்டின் மூலம் சேகரிக்கப்படும் வருமானம் மாத்திரம் காண்பிக்கப்படுவதுடன் சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் தொடர்பான குறித்த தகவல்கள் சபையிடம் இருக்கவில்லை.

## 2.3.7 ஏனைய வருமானம்

----------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) புதிய வியாபாரத் தொகுதியில் 03 கடைகளுக்கு உரித்தான 2015 மே மாதம் வரையிலும் ரூபா 13,450 தொகையான நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் பொதுச் சந்தையில் 05 பழைய கடைகளுக்கு உரித்தான ரூபா 14,350 தொகையான நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) சபைக்குரித்தான வளாகத்தில் வியாபாரத்தை மேற்கொள்வதற்காக ரூபா 246,361 தொகையான நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கிருந்ததுடன், அவர்களுடன் முறையான வகையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராமையால் நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்காக சட்ட நடவடிக்கைகள் போன்ற எதிர்வரும் நடவடிக்கைகள் எதனையும் சபையால் எடுக்க முடியாதிருந்தது.

(இ) சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் காட்சிப்படுத்தப்படும் நிலையான மற்றும் தற்கால விளம்பரப் பதாதைகள் தொடர்பாக விபரமான பதிவேடு பேணப்பட்டு வர்த்தமானி அறிவித்தலினூடாக பிரசுரிக்கப்பட்டு குறித்த கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------

## 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையிடம் உள்ள காணிகள் மற்றும் ஆதனங்கள் தொடர்பாக நாளதுவரையானதும் போதிய தகவல்கள் அடங்கிய நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று சபையிடம் இருக்கவில்லை.

(ஆ) சபையின் சேவையில் ஈடுபட்டிருந்த 03 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 27,699 தொகை 2015 மே மாதம் வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் 2009 ஒக்டோபர் 30 ஆம் திகதி ரூபா 903,181 தொகையான பணம் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்ட நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அமுலாக்கப்படுகையில் நிலவிய வழமைக்கு மாறான தாமதம் காரணமாக அச் செயற்திட்ட நிர்மாணிப்பிற்கான உடன்படிக்கை பூர்த்தியடைந்ததாகவும் ரூபா 903,181 தொகையை மீள வழங்குமாறும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் மேற்குறித்த பணம் மீள அவர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் சேதனப் பசளை தொட்டி நிர்மாணிக்கப்படுவதற்கான மாற்று நடவடிக்கையேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந் நிலையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் கலவான பிரதேச சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் வாய்ப்பு அவதானிக்கப்பட்டது.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------

கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக 2014 நவம்பர் 10 ஆம் திகதி முதல் 2014 நவம்பர் 16 ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம்பெற்ற பயிற்சிச் செயலமர்விற்காக தலைவருக்காக ரூபா 98,220 தொகையான பணம் தனியார் நிறுவகத்திற்கு சபை நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முறையான அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாது தனியார் நிறுவகத்தின் மூலம் மின்னஞ்சல் மூலம் கௌரவ ஆளுனரின் முன் அங்கீகாரம் பெறப்படாது பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2010 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக முறையான வகையில் லீவு அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் கலந்துகொண்ட வெளிநாட்டுச் சுற்றுலாவிற்காக ரூபா 39,750 தொகையான இணைந்த கொடுப்பனவாக சபை நிதியம் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

(iii) உள்ளூராட்சித் தலைவர் ஒருவர், பிரதிநிதி ஒருவர் அல்லது உறுப்பினர் ஒருவர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படின் குறித்த அமைப்பு அல்லது வெளிநாட்டு அரச அல்லது வெளிநாட்டு நிறுவகம் அல்லது இதற்காகச் செலவிடப்படும் சகல செலவினங்களையும் வசதிகளையும் ஏற்க வேண்டிய போதிலும் இது தொடர்பாக கருத்திற்கொள்ளாது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iv) பயிற்சி முடிவுற்று 06 மாதங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், வெளிநாட்டுப் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு உள்நாட்டில் பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பான ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சனாதிபதி செயலாளரின் 2012 யூன் மாதம் 11 ஆம் திகதிய CSA1/1/16 ஆம் இலக்கக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் அழைப்பில் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டத்திற்காக கோரலாகாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த வெளிநாட்டுச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

------------------------------------------

ஆராய்ச்சிப் பொருள் ஒன்றின் மூலம் கள ஆய்வை மேற்கொண்டு குகுலேகங்க பிரதேசத்தில் கொட்டணுகேன எனும் பெயரிலான காணியில் நிலையான கழிவுப்பொருள் மீள்சுழற்சி செயற்திட்டத்தை நிர்மாணிக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந் நாள் முதல் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் வரை தற்காலிகமாக சுகாதாரப் பாதுகாப்பான முறையில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2015 மே மாதம் வரையிலும் மேற்குறித்த செயற்திட்டத்தின் முன்னேற்றம் இருக்கவில்லை.

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலைய நிர்மாணிப்பிற்காகத் திட்டமிடப்பட்டிருந்த காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கொஸ்வத்த கொரலேகொட வத்த எனும் பெயரிலான காணியில் 09 ஏக்கர் காணியைச் சுற்றிவர அளவிடுவதற்கான கட்டணமாக 2014 யூலை 17 ஆம் திகதி ரூபா 70,000 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும்,

கொட்டனுஹேன காணியில் குறித்த கழிவுப்பொருள் மீள்சுழற்சிச் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருந்தமையால் ஏற்கப்பட்ட ரூபா 70,000 தொகையான பணம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்